IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மயிலே சீனி. வேங்கடசாமியின் பழங்காலத் தமிழர் வாணிகம்

**முனைவர் அ. வனிதா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை – 08

**முன்னுரை**

**பழங்காலத் தமிழர் வாணிகம்** என்னும் இந்நூல் கடைச்சங்க **காலத்தில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2 ஆம் நூற்றாண்டு** வரையில் தமிழர் நடத்திய வாணிகத்தைப் பற்றிக் கூறுகின்றது. அந்தக் காலத்துப் பழந்தமிழர் பாரததேசத்தின் வடக்கே கங்கைக்கரை அதாவது பாடலிபுரம் முதலாகக் கிழக்குக் கரை மேற்குக்கரை நாடுகளில் நடத்திய வாணிகத்தைப் பற்றியும் தமிழகத்துக்கு அப்பால் கிழக்கே இலங்கை, சாவகநாடு, மலேயா, பர்மா முதலான கடல் கடந்த நாடுகளோடு செய்த வாணிகத்தைப் பற்றியும், மேற்கே அரபுநாடு, அலக்சாந்திரியம்(எகிப்து) உரோம் தேசம்(யவன தேசம்) ஆகிய நாடுகளுடனும் செய்த வாணிகத்தைப் பற்றியும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்து வாணிகச் செய்திகளைச் **சங்ககாலத்து நூல்களை ஆதாரமாகக்** கொண்டு எழுதியுள்ளார். **தாலமி, பிளைனி முதலான யவன ஆசிரியர்** எழுதின குறிப்புகளிலிருந்தும் **செங்கடல் வாணிகம் என்னும் நூலிலிருந்தும், புதைப்பொருள் ஆய்வுகளிலிருந்தும்** கிடைத்த செய்திகளிலிருந்தும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டும் அவர் இந்நூலினை எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அதன்வழி இந்நூலில் கூறப்பட்ட கருத்துகளைத் திறனாய்வு செய்யும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**மயிலே சீனி. வேங்கடசாமி**

**மயிலை சீனி. வேங்கடசாமி**[ அவர்கள் திசம்பர் 16, 1900 இல் சென்னையில் மயிலாப்பூரில் பிறந்தார். இவரின் இறப்பு சூலை 8, 1980. இவர் தமிழறிஞர்; எழுத்தாளர். கோவிந்தராஜன், மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பண்டித சற்குணர் ஆகியோரிடம் தமிழ் படித்தார். ஆசிரியர் பயிற்சி பெற்று சாந்தோம் மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணி ஆற்றியுள்ளார். வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று ஆய்வுச் செய்துள்ளார். ஆய்வு செய்து தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் ஆகிய துறைகளில் ஆய்வு செய்துள்ளார். பிராமி, கிரந்தம், தமிழ் கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைக் கற்று கல்வெட்டுகள், செப்பேடுகள் எழுத்துகளைப் படித்து ஆராந்துள்ளார். சமண, புத்த சமய கோயில்களையும் தொல்லியல் களங்களையும் ஆய்வு செய்து தமிழ் நாட்டின் வரலாறு அறிய உறுதுணயாக இருந்துள்ளார். தமிழக வரலாறு பற்றி பல அரிய ஆய்வு நூல்களை எழுதியவர். அவற்றில் ஒன்று தான் **பழங்காலத் தமிழர் வாணிகம்.**

**நூல் அறிமுகம்**

**பழங்காலத் தமிழர் வாணிகம்** என்னும் இந்நூல் கடைச்சங்க **காலத்தில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2 ஆம் நூற்றாண்டு** வரையில் தமிழர் நடத்திய வாணிகத்தைப் பற்றிக் கூறுகின்றது. அந்தக் காலத்துப் பழந்தமிழர் பாரததேசத்தின் வடக்கே கங்கைக்கரை அதாவது பாடலிபுரம் முதலாகக் கிழக்குக் கரை மேற்குக்கரை நாடுகளில் நடத்திய வாணிகத்தைப் பற்றியும் தமிழகத்துக்கு அப்பால் கிழக்கே இலங்கை, சாவகநாடு, மலேயா, பர்மா முதலான கடல் கடந்த நாடுகளோடு செய்த வாணிகத்தைப் பற்றியும், மேற்கே அரபுநாடு, அலக்சாந்திரியம்(எகிப்து) உரோம் தேசம்(யவன தேசம்) ஆகிய நாடுகளுடனும் செய்த வாணிகத்தைப் பற்றியும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்து வாணிகச் செய்திகளைச் **சங்ககாலத்து நூல்களை ஆதாரமாகக்** கொண்டு எழுதியுள்ளார். **தாலமி, பிளைனி முதலான யவன ஆசிரியர்** எழுதின குறிப்புகளிலிருந்தும் **செங்கடல் வாணிகம் என்னும் நூலிலிருந்தும், புதைப்பொருள் ஆய்வுகளிலிருந்தும்** கிடைத்த செய்திகளிலிருந்தும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டும் அவர் இந்நூலினை எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

- **சங்ககால மக்கள் வாழ்க்கை**

சங்ககாலத்துத் தமிழர் வாழ்க்கைக்கும் இக்காலத்துத் தமிழர் வாழ்க்கைக்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. இப்போதுள்ள நாகரிகம் அக்காலத்தில் இல்லை.

அக்காலத்தில் அனைத்து நாடுகளிலும் மனித வாழ்க்கையும் நாகரிகமும் மட்டமாகவும் தாழ்ந்த நிலையிலும் இருந்தன. மக்கள் வாழ்ந்த இடத்துக்கும் சூழ்நிலைக்கும் தக்கபடி அவர்களுடைய நாகரிகமும் வாழ்க்கையும் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன. அவர்கள் வாழ்ந்த இடங்களும் சூழ்நிலைகளும் ஒரே மாதிரி இல்லாமல் வெவ்வேறு வகையாக இருந்தபடியால் அவர்களுடைய வாழ்க்கை வெவ்வேறு விதமாகத் துன்பமாக அல்லது எளிதாக இருந்தது. (பக்கம்.5)

மக்கள் வாழ்ந்த நிலத்தினுடைய இயற்கையமைப்புக்குத் தக்கபடி அக்காலத்து மக்கள் வாழ்க்கை அமைந்திருந்தது. குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம், பாலைநிலம் என்னும் நிலப்பிரிவுப்படி அவர்களுடைய வாழ்க்கையும் ஐந்து வகையாக இருந்தது.

மலையும் குன்றுகளும் உள்ள இடங்கள் குறிஞ்சி நிலம் என்று பெயர் பெற்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழ் நாட்டில் அமைந்துள்ளன. மக்கள் மலைகளின் மேலும் மலைச்சாரல்களிலும் வாழ்ந்து வந்தார்கள்.

மலைகளுக்குக் கீழே இருந்த காடுகளும் காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம் என்று பெயர் பெற்றன. இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை மலைகளில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையைவிட வேறுவிதமாக இருந்தது.

ஆறுகள் பாய்கிறதும் அல்து ஏரி குளங்கள் உள்ளதுமான சமவெளிகள் மருதம் என்று பெயர் பெற்றன. இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை மற்றவர்களுடைய வாழக்கையைவிட மேலானதாக இருந்தது.

கடற்கரையோரமாக இருந்த நிலங்கள் நெய்தல் நிலம் என்று பெயர் பெற்றன. கடற்கரையான நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவர் வாழ்க்கை துன்பகரமான வாழ்க்கையாக இருந்தது. அவர்கள் நாள்தோறும் கடலில் வெகுதூரம் சென்று மீன்பிடித்து வந்து வாழ்க்கையை நடத்தினார்கள்.

இந்த நால்வகையான இயற்கை நிலம் அல்லாத வறண்ட நிலப்பகுதி பாலைநிலம் என்ற பெயர் பெற்றது. இங்கு வாழ்ந்த மக்கள் வாழ்க்கை மிருகவாழ்க்கை போன்று இருந்தது.

இவ்வாறு இயற்கையாக அமைந்த வெவ்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்த அக்காலத்துத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை வெவ்வேறு வகையாக இருந்ததால் அவர்களுடைய

தொழிலும் உணவும் உடையும் பண்பாடும் மாறுபட்டுக் காணப்பட்டன என்னும் கருத்தை ஆசிரியர் மிக விரிவாக இந்நூலின் கண்ணே குறிப்பிட்டுள்ளார்.

- **சங்ககால வாணிகம்**

பழங்கால வாணிகத்துக்கும் இக்காலத்து விஞ்ஞான உலக வாணிகத்துக்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. பழங்காலத்தவர் அக்காலத்து இடம் பொருள் ஏவல்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கப்படித் தரை வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் நடத்தினார்கள். அவர்க் கூட்டமாகக் சேர்ந்து சாத்து அமைத்துப் பெரிய வாணிகம் நடத்தினார்கள். தரை வாணிகம் செய்த வாணிகத் தலைவர் மாநாய்கர் என்று பெயர் கூறப்பட்டனர். அக்காலத் தமிழகத்திலே பல மாசத்துவர்களும் பல மாநாய்கர்களும் இருந்தார்கள் என்று சிலப்பதிகாரச் செய்திகளை எடுத்துக்காட்டி கூறியுள்ளார்.

சங்க காலத்தில் நடைபெற்ற வாணிகத்தைப் பொதுவாக

- **பண்டமாற்று வாணிகம்**
- **உள்நாட்டு வாணிகம் – தரைவழி வாணிகம்**
- **அயல்நாட்டு வாணிகம் – கடல்வழி வாணிகம்**

எனப் பகுத்து விளக்கும் வகையில் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் இந்நூலினை எழுதியுள்ளார்.

- **பண்டமாற்று வாணிகம்**

பண்டமாற்று வாணிகம் என்பது ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொள்வது ஆகும். சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான **அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டார்கள்.** இச்சூழல் தான் சங்ககாலத் தமிழ் மக்களிடத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. அதற்கான சான்றுகளை மயிலை சீனி வேங்கசாமி இந்நூலில் சங்ககால நூல்களைச் சான்றுகாட்டி விளக்கியுள்ளார். இதனை

- **பொதுவான பண்டமாற்றுப் பொருள்கள்**
- **பண்டமாற்றாகப் பசு, எருமை**
- **பண்டமாற்றாக மதுபானம், மீன் வருவல், மான் இறைச்சி**
- **காசு(நாணயம்)**

ஆகிய வகைமைகளில் பிரிக்கலாம்.

- **பொதுவான பண்டமாற்றுப் பொருள்கள்**

1. பால் ⟶ தானியம் (குறுந்தொகை. 221:3-4)
2. தயிர், மோர் ⟶ தானியம் (பெரும்பாணாற்றுப்படை. 155-163)
3. மீன் ⟶ தானியம் (நற்றிணை. 239:3)
4. மீன் ⟶ பயறு, தானியம் (ஐங்குறுநூறு, மருதம், புலவிப்பத்து, 47.
5. மீன் ⟶ வெண்நெல்( ஐங்குறுநூறு, மருதம், புலவிப்பத்து, 48.)
6. மீன் ⟶ நெல் (அகநானூறு. 340:14-15, 60:4,320:2-5)
   (புறநானூறு.343:1-2)
7. நெல் ⟶ உப்பு (ஐங்குறுநூறு, மருதம், புலவிப்பத்து, 49.)
8. உப்பு ⟶ நெல் (அகநானூறு. 140:5-8, 390: 8-9)
   (பட்டினப்பாலை. 28-30)
   (குறுந்தொகை. 269:4-6)
   (நற்றிணை. 254:6)
9. மான், இறைச்சி ⟶ நெல் புறநானூறு . 33:1-8

ஆகிய பண்டமாற்று முறைகளை ஆசிரியர் சங்க இலக்கியப் பாடல்வழி எடுத்துக்காட்டி, தமிழர்களின் பண்டமாற்று வாணிகத்தைச் சுட்டிச்செல்கிறார்.

- **பண்டமாற்றாகப் பசு, எருமை**

இடைச்சியர் நெய்யைப் பண்டமாற்று செய்யாமல் காசுக்கு விற்று அக்காசுகளைச் சேமித்து வைத்தார்கள் என்பதாகவும், குறிப்பிட்ட தொகை காசு சேர்ந்த போது அக்காசைக் கொடுத்துப் பசுவையும் எருமையும் விலைக்கு வாங்கினார்கள் என்பதாகவும்

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்**
**மடிவாய்க் கோவலர் – பெரும்பாணாற்றுப்படை 164-166**

என வரும் பாடல் மூலம் கூறுகிறார்.

- **பண்டமாற்றாக மதுபானம், மீன் வருவல், மான் இறைச்சி**

தமிழ் மக்கள் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதியில் கிடைத்த பொருளைக் கொடுத்து மதுபானம், மீன்வருவல், மான் இறைச்சி போன்ற பொருள்களைப் பெற்றதையும், சில இடங்களில் பொருளைப் பிறகு தருவதாகக் கடன் சொல்லி மதுபானம் பெற்ற செய்திகளையும் இந்நூலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இதனை

யானை தந்தம் ⟶ மதுபானம் (அகநானூறு. 61:8-10, 245:8-13)

தேன், கிழங்கு ⟶ மதுபானம், வறுத்த மீன், இறைச்சி


(பொருநராற்றுப்படை.214-217.)

முத்துச்சிப்பி ⟶ கள் (அகநானூறு. 296: 8-10)

என்னும் பாடல் அடிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. பூ விற்ற செய்தியை நற்றிணை. 118:8-11, 97: 6-9 ஆகிய பாடல்கள் கூறுவதாகக் கூறியுள்ளார்.

❖ **உள்நாட்டு வாணிகம் – தரைவழி வாணிகம்**

பண்டமாற்று முறையில் தொடங்கிய பழந்தமிழ் மக்களின் தொழில்முறை உள்நாட்டு வாணிகமாக மாறியது. மக்கள் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிக்குத் தக்க தொழில் செய்து அதன் மூலம் கிடைத்த உற்பத்திப் பொருட்களை நிலம்விட்டு நிலம் சென்று, பண்டமாற்று முறையில் விற்பனை செய்தார்கள். இது உள்நாட்டு வாணிகம் என்றும் தரைவழி வாணிகம் என்றும் பெயர் பெற்றன. இதனால் தமிழ்நாட்டில் பல வாணிகர்கள் தோன்றினார்கள். காலம் செல்ல செல்ல வாணிகர்கள் வாயிலாகத் தமிழ்நாட்டு பழந்தமிழர் தங்கள் வாணிகத்தை வளர்த்தார்கள் இந்நூலின் மூலம் புலனாகிறது.


பழந்தமிழர் வாணிகக் கடல்வழிகள்

❖ **அயல்நாட்டு வாணிகம் – கடல் வழி வாணிகம்**

தமிழ்நாட்டு பழந்தமிழர் தங்கள் வாணிகத்தை உள்நாட்டில் தொடங்கி கடல்வழியாகவும் வாணிகம் செய்யும் அளவுக்கு விரிவடைய செய்தனர். கடல் வாணிகம் இரண்டு விதமாக நடந்தது. கரைவழி ஓரமாகவே கப்பல்களை ஓட்டி நடத்தின வாணிகம் ஒன்றாகவும் கரைவழி ஓரமாகச் செல்லாமல் நடுக்கடலில் கப்பல்களைச் செலுத்திக் கடல் கடந்த நாடுகளுக்குப் போய் வாணிகம் செய்தது மற்றொரு வகையாகவும் இருந்தது. தரைவழி வாணிகமாக இருந்தாலும் கடல்வழி வாணிகமாக இருந்தாலும் இக்காலத்து வசதிகளைப் போல அக்காலத்தில் வசதிகள் இல்லை. ஆனாலும் அந்தக் கடினமான சூழ்நிலைகளிலும் தரை வாணிகமும் கடல் வாணிகமும் நடந்தன. தமிழ்நாட்டு பழந்தமிழ் வாணிகர் அயல் நாடுகளான மேற்கே இத்தாலி, கிரேக்க தேசம்(யவன நாடு) முதல் கிழக்கே சாவக நாடு(கிழக்கிந்தியத் தீவுகள்), பர்மா, மலாயா வரையிலும் தெற்கே கன்னியாகுமாரி முதல் வடக்கே கங்கைக் கரை வரையிலும் தமிழர் வாணிகம் நடத்தியதையும் குறிப்பிட்டுள்ளார்.

- **காசு(நாணயம்)**

பண்டமாற்றில் நாணயம் இடம்பெற்ற செய்தி இடம்பெறவில்லை. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் நாணயம் இடம்பெற்றிருக்கலாம் என்று கூறுகிறார். அதற்கான சான்றுகள் எதையும் அவர் காட்டவில்லை. மாறாக பெண்கள் அணிந்த அணிகலன்களையும் மன்னன் புலவர்களுக்குப் பொற்காசுகளைப் பரிசு அளித்ததையும் எடுத்துக்காட்டுகிறார். மேலும் கடல் கடந்த கப்பல் வாணிகத்தின் மூலமாக உரோம(யவன) தேசத்து நாணயங்கள் தமிழ்நாட்டில் வழங்கி வந்தன. அக்காசுகள் சமீப காலத்தில் ஏராளமாகப் புதையல்களிலிருந்து கிடைத்துள்ளன என்கிறார். (பக்கம், 21-24)

➢ **வாணிகத்தில் போக்குவரத்துச் சாதனங்கள்**

வாணிகப் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாகவில்லை. மக்கள் வாழ்ந்த நிலப்பகுதி வெவ்வேறு பகுதிகளாக இருந்ததால் வாணிகப் பொருள்களை எடுத்துச் செல்ல இடம்விட்டு இடம்நகரக் கூடிய பொருள்கள் தேவைப்பட்டன. அவ்வாறு தேவைப்பட்ட பொருள்கள் போக்குவரத்துச் சாதனங்களாகக் கருதப்படுகின்றன. அவை

- **கால்நடைகள்**
- **வண்டிகள்**

என இரண்டு வகைகளில் காணப்படுகின்றன.

- **கால்நடைகள்**

கால்நடைகளாக இருந்த எருது, கழுதை, குதிரை ஆகிய விலங்கினங்கள் வாணிகம் செய்ய போக்குவரத்துச் சாதனங்களாகப் பயன்பட்டன.

**எருது** ⟶ பொதி சுமக்கப் பயன்பட்டது.

**குதிரை** ⟶ சிந்து, பாரசீகம் அரபி நாடுகளிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டுவரப்பட்டன. குதிரைகளைப் பொதிசுமக்கப் பயன்படுத்தினர். வாணிகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு போகின்ற வண்டிகளை இழுக்கவும் பயன்படுத்தினர். குதிரை பயணம் செய்ய மிகுதியாகப் பயன்பட்டது என்கிறார்.

**கழுதை** ⟶ கழுதை பொதி சுமப்பதில் மிகுதியான பங்கு வகித்தது. பாறைகள், குன்றுகள் நிறைந்த பகுதிக்குச் செல்ல கழுதை எளிதாக இருந்தது. வில் வீரர், வாள் வீரர்களை உடன் அழைத்துச் சென்றனர். கொள்ளையர்களிடம் இருந்து வாணிகப் பொருள்களைக் காப்பாற்றுவதற்காக வீரர்களை உடன் அழைத்துச் சென்றனர்.

**அகநானூறு. 89: 9-14, 343: 12-13, 207: 1-6 (பக்கம்,30)**

**பெரும்பாணாற்றுப்படை. 77-82 (பக்கம்,30)**

ஆகிய இரு நூல்களில் மேற்குறித்த செய்திகள் இடம்பெற்றிருப்பதாக மயிலை சீனி. வேங்கடசாமி கூறியுள்ளார்.

- **வண்டிகள்**

பழந்தமிழ் மக்கள் வாணிகம் செய்தில் மாட்டுவண்டிகளையும், பாய்மரக்கப்பல்களையும் பயன்படுத்தினார்கள்.

**மாட்டுவண்டிகள்** – வாணிகப் பொருட்களை ஏற்றிச் செல்வதில் மாட்டு வண்டிகள் பயன்பட்டன. வண்டியில் எருதுகளைப் பூட்டி வண்டியை ஓட்டிச் சென்றுள்ளனர்.

**பாய்மரக் கப்பல்கள்** – கடல்வழி வாணிகம் செய்வதில் பாய்மரக் கப்பல்கள் மிகுதியாகப் பயன்பட்டன.

➢ **வாணிகத்தில் துறைமுகப் பட்டினங்கள்**

சங்கக்காலத்துத் தமிழரசர்கள் தங்களுடைய நாடுகளில் வணிகர்க்கு ஊக்கமளித்து வாணிகத்தை வளர்த்தார்கள். அவர்கள் தங்களுடைய நாடுகளில் வாணிகக் கப்பல்கள் வந்து போகவும் ஏற்றுமதி இறக்குமதி செய்யவும் கடல்வழி வாணிகம் செய்தபோது துறைமுகப் பட்டினங்களை அமைத்தார்கள். இரவுக்காலத்தில் கடலில் வருகிற கப்பல்களை திசை தப்பிப் போகாமலும் துறைமுகத்தைக் காட்டவும் கலங்கரை விளக்குகளை அமைத்தார்கள். துறைமுகங்களில் உள்ள வாணிகப் பொருள்கள் களவு போகாதபடி காவல் வைத்தனர். வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டின வணிகப் பெருமக்களுக்கு எட்டி என்னும் சிறப்புப் பெயரும், எட்டிப்பூ என்னும் பொற்பதக்கத்தையும் அளித்துச் சிறப்பினைச் செய்தார்கள். துறைமுகபட்டினங்கள்

- **தமிழகத்தின் கிழக்குக்கரை துறைமுகப்பட்டினங்கள்**
- **தமிழகத்தின் மேற்குக்கரை துறைமுகப்பட்டினங்கள்**
- **இலங்கை துறைமுகப்பட்டினங்கள்**

என மூன்றாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

**தமிழகத்தின் கிழக்குக்கரை துறைமுகப்பட்டினங்கள்**

தமிழகத்தின் கிழக்குக்கரை துறைமுகப்பட்டினங்களாக

- கொல்லத்துறை
- எயிற்பட்டினம்(சோபட்டினம்)
- அரிக்க மேடு (போதவுகே)
- காவிரிப்பூம்பட்டினம்(பூம்புகார்)
- தொண்டி

- மருங்கூர்ப்பட்டினம்
- கொற்கை
- குமரி

ஆகியவற்றை அவர் சுட்டியுள்ளார்.

**தமிழகத்தின் மேற்குக்கரை துறைமுகப்பட்டினங்கள்**

தமிழகத்தின் மேற்குக்கரை துறைமுகப்பட்டினங்களாக

- மங்களூர்
- நறவு
- மாந்தை
- முசிறி
- வைக்கரை
- மேல்கிந்த
- விழிஞம்

ஆகியவற்றை அவர் சுட்டியுள்ளார்.

**இலங்கை துறைமுகப்பட்டினங்கள்**

இலங்கை துறைமுகப்பட்டினங்களாக

- மணிபல்லவம்(ஜம்பு கொல பட்டினம்)
- மாதிட்டை (மாதோட்டம்)

ஆகியவை விளங்கின என்பதை இந்நூலில் எடுத்துகாட்டி, அந்தத் துறைமுகங்கள் வாயிலாக எந்த அரசன், என்ன பொருளை ஏற்றுமதி செய்தான் என்பன போன்ற வரலாற்றுச் செய்திகளைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார். இதன் மூலம் இந்நூல் ஒரு வரலாற்று நூலாகவும் தென்படுகிறது.


**தமிழகத்தின் விளைபொருட்களும் உற்பத்திப் பொருட்களும்**

பழந்தமிழ் மக்கள் தாங்கள் விளைவித்த பொருள்களையும் உற்பத்தி செய்த பொருற்களையும் ஏற்றுமதி செய்து வாணிகம் செய்துவந்தனர். இந்நூலில் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்

- வெல்லமும் சர்க்கரையும்
- கள்ளும் மதுவும்
- மிளகு
- அறுவை(துணி)
- உப்பு
- வளை
- முத்து
- யானைக்கோடு
- நீலக்கல்

ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்தனர் என்று சங்க இலக்கிய சான்றுகள் வழி நிறுவுகிறார்.

➢ **பெயர் அகராதி**



பெயர் அகராதி

முக்கியமான இடப்பெயர் குறிப்பிடப்படுகிறது.

அ
அகஸ்தஸ் 60
அகுஸ்தஸ் 79
அநுராதபுரம் (அநுரை) 40, 56, 86, 111
அமராபதிநகர் 40
அம்போரே 79, 124
அராபிய வாணிகர் 57
அராபிய (அரபியர்) 57, 58, 70, 106, 128, 135
அரிக்க மேடு 61, 72, 74, 75, 78, 79, 80, 81, 124
அருமணவன் (ஊர்) 56
அலக்சாந்திரியம் 58
ஆ
ஆபுத்திரநாடு 67
இ
இந்தோனேஷியத் தீவுகள் 42
இந்தோனேஷியா 91, 134
இருளர் (இறவுளர்) 7
இலங்கொன் (விழிஞம்) 109, 110
இலங்கை 41, 72, 88, 111, 112, 113, 114
ஈ
ஈயக்காசு 24
ஈழம் 88
உ
உஞ்சை (உச்சயினி) 56
உரோம் சாம்ராச்சியம் 58, 60, 79,
உரோம் தேசம் 124, 147
உரோம் தேசத்துப் பழங் காசுகள் 24, 65, 75, 131
உரோம் நாடு 58, 107
உரோமர் 58, 128
உரோமாபுரி (ரோமாபுரி). 43, 81, 127, 128
எ
எகிப்து (எகிப்து தேசம்) 58, 135
எட்டி (பட்டம்) 53, 54.
எட்டிப்பூ (பதக்கம்) 54
எயிற்பட்டினம் (சோ பட்டினம்) 72, 74, 75. 77, 78

158

**பழங்காலத் தமிழர் வாணிகம்** என்னும் இந்நூலின் இறுதியில் பெயர் அகராதியைக் கொடுத்து இருக்கிறார். இதில் இந்நூலில் இடம்பெற்ற இடப்பெயர் மட்டும் இடம் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இடப்பெயர்கள் உடன் வணிகம் செய்ய ஊர்தியாகப் பயன்பட்ட சில விலங்குகளின் பெயர்களும் சில பொதுவான பெயர்களும் இடம் பெற்றள்ளன. உ.வே. சாமிநாதையர் அவர்கள் தான் பதிப்பிக்கும் நூல்களில் இறுதியாக அந்நூலில் இடம்பெற்ற அரிய சொற்களைப் பொருள்களுடன் அகரவரிசைப்படுத்தி கொடுப்பார். அவர்தான் முதல்முதலில் இத்தகைய ஒரு அமைப்பைக் கொண்டுவந்தார். இது அந்நூலில் இடம்பெற்றுள்ள முக்கிய சொற்களையும் அதன் பொருட்களையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமைந்திருந்தது. பின்னாலில் அகராதி போன்ற கருவி நூல்கள் தோன்றுவதற்கு அவர் உருவாக்கிய அருஞ்சொற்பொருள் அகராதி போன்ற கருவி நூல்கள் தோன்ற முக்கிய காரணமாக அமைந்திருந்தது. அத்தகைய ஒருமுறையை மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் இந்நூலில் பயன்படுத்தி இருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது.

## ➢ முடிவுரை

இவ்வாய்வின் வழி பெறப்பட்ட முடிவுகள்:

✓ ஒரு நாட்டின் சரித்திரம் அந்நாட்டை அரசாண்ட அரசர்களுடைய வரலாறு மட்டும் அன்று. அந்நாட்டில் வாழ்ந்த குடிமக்களின் வாழ்க்கை வரலாறும் சேர்ந்தே சரித்திரமாகிறது என்பதை இந்நூலால் அறியமுடிகிறது.

✓ சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதி வாணிகத்தைச் சார்ந்தது. அக்காலத்து வாணிகத்தைக் கூறுகிற இந்நூல் பழந்தமிழர் வரலாற்றின் ஒரு கூறாக அமைந்துள்ளது.

✓ தரை வாணிகமும் கடல் வாணிகமும் பெருகவே அவற்றைச் சார்ந்த பயிர்த்தொழில் வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் பெருகிப் பொருள் உற்பத்தியும் அதிமாகியது என்பதை இந்நூலின் வழி உணரமுடிகிறது..

✓ பொருள்களின் உற்பத்தியினாலும் வாணிகத்தினாலும் பொருளாதாரம் உயர்ந்து நாடு செழித்து மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

✓ நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் நாகரிக வாழ்க்கைக்கும் வாணிகம் முக்கிய காரணமாக இருந்தது என்பது தெரிகிறது.

✓ தமிழரின் பழைய வரலாற்றை அறிய விரும்புவோர்க்கு இந்நூல் நல்லதோர் துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.